மாலை முரசு
பக்கங்கள் 14
முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 21 ஞாயிற்றுக்கிழமை 08.10.2023 அதிர்வு 69

## பணிப்பெண்கள் இருவர் கொலை

### மாத்தறையில் பயங்கரம்

மாத்தறையில் உள்ள வீடொன்றில் வீட்டுப் பணிப்பெண்ணாகக் கடமையாற்றிய மலம்படை மற்றும்

04▶

## மட்டக்களப்பில் பதற்றம்

# ஆக்கிரமிப்புக்கு எதிராக மாபெரும் ஆர்ப்பாட்டம்!

### பொலிஸார் - பண்ணையாளர்கள் முறுகல்



(மட்டக்களப்பு நிருபர்கள்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் மேய்ச்சல் தரைப் பிரதேசமாக அடை யாளப்படுத்தப்பட்ட காணிகளை சட்டவிரோதமாக ஆக்கிரமித்தவர்களை வெளியேற்றுமாறு கோரி பண்ணை யாளர்கள் இன்று மட்டக்களப்பு - கொம்மாதுறையில் மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

04▶





## எந்தத் தடை வந்தாலும் போராட்டம் தொடரும்

### உரிமை கிடைக்கும் வரை ஓயமாட்டோம்; கூட்டமைப்பு எம்.பி. சாணக்கியன் சூளுரை

(மட்டக்களப்பு நிருபர்கள்)

“உரிமை இழந்தோம்; காணிகளையும் இழந்தோம். எங்கள் உணர்வை இழக்கலாமா? தோல்வி நிலையென நினைத்தால் தன்மானத் தமிழன் வாழ்வை நினைக்கலாமா? எமது அறவழிப் போராட்டம் எமது மக்களுக்காக எந்தத் தடை வந்தாலும் உரிமை கிடைக்கும் வரை தொடரும்.”

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

04▶



# தமிழ் தேசியக் கட்சிகளின் ஏற்பாட்டில் எதிர்வரும் 13 இல் கதவடைப்புப் போர்!

## முழுமையான ஆதரவு தெரிவித்துள்ளது வணிகர் கழகம்

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு நீதி கோரி, எதிர்வரும் 13 ஆம் திகதி தமிழ் தேசியக் கட்சிகள் திட்டமிட்டுள்ள கதவடைப்பு போராட்டத்துக்கு யாழ். வணிகர் கழகம் முழுமையான ஆதரவு தெரிவித்துள்ளது.

யாழ். வணிகர் கழக பிரதிநிதிகளுக்கும் தமிழ் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று (07) யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு நீதி கோரும் விவகாரத்துடன் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முழுமையான சர்வதேச தலையீட்டையும் கோரி இந்தக் கதவடைப்பு போராட்டம் நடத்தப்படவேண்டும் என்றும் வணிகர் கழகம் வலியுறுத்தியுள்ளது.

தமிழ் மக்களின் உரிமை போராட்டம் சார்ந்த எந்த நடவடிக்கைக்கும் பரிபூரண ஆதரவை வழங்கிவரும் பாரம்பரியத்தையுடைய யாழ்ப்பாண வணிகர் கழகம், இந்த போராட்டத்தையும் முழுமையாக ஆதரிப்பதாக வணிகர் கழகத்தினர் தெரிவித்தனர்.

எனினும் நீதிபதி விவகாரத்துடன், தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கு, முழுமையான சர்வதேச தலையீட்டையும் கோரி இந்த சுதவடைப்பு போராட்டம் நடந்தப்பட வேண்டுமென்றும் வணிகர் கழகம் வலியுறுத்தியுள்ளது.

தமிழீழ விடுதலை இயக்க தலைவர் தசித்தார்த்தன், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

# மத்திய கல்வி அமைச்சுக்கு முன்பாக அதிபர், ஆசிரியர்கள் 24 இல் மறியல்!

அதிபர், ஆசிரியர்களின் சம்பள நிலுவைகளை கோரி எதிர்வரும் 24 ஆம் திகதி கொழும்பில் உள்ள மத்திய கல்வி அமைச்சுக்கு முன்பாகப் பெரிய மறியல் போராட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.




அனைத்து ஆசிரியர் மற்றும் அதிபர்களை இதில் கலந்து கொள்ளுமாறு இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் யாழ். மாவட்ட செயலாளர் ஜெயராஜசிங்கம் போல்வின் அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதிபர் மற்றும் ஆசிரியர்களின் சம்பள நிலுவை தீர்க்கப்படாமல் உள்ளதால் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் ஆசிரியர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு ஆளாகி வருகின்றனர்.

சம்பள நிலுவை தொடர்பில் அரசுடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேச்சு நடத்திய போதும் இதுவரை தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படவில்லை.

அதிபர், ஆசிரியர்களின் ஏனைய நிலுவைகள் மற்றும் நிர்வாகப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் உள்ளமையால் அவற்றை தீர்க்கும் முகமாக அரசுக்கு அழுத்தம் வழங்குவதற்கு இந்தப் போராட்டத்தை ஒழுங்கு செய்துள்ளோம்.

ஆகவே அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு நிரந்தர தீர்வைக் காணும் முகமாக எதிர்வரும் 24 ஆம் திகதி அனைத்து ஆதிபர், ஆசிரியர்களும் கொழும்பில் இடம்பெறும் உரிமைப் போராட்டத்தில் கலந்து கொள்ளுங்கள்.-என்றார்.

இந்த ஊடக சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட கல்வி வலயங்களுக்கான செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

# இஸ்ரேல் – பலஸ்தீனம் மோதல்: கவலை வெளியிட்டது இலங்கை!

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான மோதல் தொடர்பில் இலங்கை கவலையடைகிறது என்று வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் வசிக்கும் இலங்கையர் ஒருவருக்கும் மோதல்கள் காரணமாக சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

காஸா எல்லையில் இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய வான்வழித் தாக்குதலில் இஸ்ரேலில் குறைந்தது 300 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவமனை அறிக்கைகளின் அடிப்படையில், தாக்குதல்களால் 232 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

# இராணுவச் சிப்பாய்கள் இருவர் கைதாகினர்!

எல்பிட்டிய பிரதேசத்தில் இராணுவ சிப்பாய் ஒருவரும் முன்னாள் இராணுவ சிப்பாய் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று இரவு (07) இந்தக் கைது இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர்கள் இருவரும் எவரையோ குறிவைத்துத் துப்பாக்கிப் பிரயோகத்துக்குத் தயாராகி இருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட போது, அவர்களிடம் இருந்து கைத்துப்பாக்கி ஒன்றும், 10 மில்லி மீற்றர் தோட்டாக்கள் பத்தும், போலி இலக்கத் தகடுகள் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

# மட்டக்களப்பு கல்லூரி நிகழ்வில் ஜனாதிபதி

மட்டக்களப்பு சென் மைக்கல் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு பூர்த்தி விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டார். நேற்று நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இராஜாங்க அமைச்சர்களான எஸ்.வியாழேந்திரன், சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.
















# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்















## ஆக்கிரமிப்புக்கு...

செங்கலடி மத்திய கல்லூரி நிகழ்வுக் குவருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் மயிலத்தமடு – மாதவனைப் பகுதியில் தாங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நேரில் முறைப்பாடு செய்வதற்காகப் பண்ணையாளர்கள் எடுத்த முயற்சிக்குப் பொலிஸார் தடை ஏற்படுத்தியதால் பண்ணையாளர்களுக்கும் பொலி ஸாருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற பகுதியில் அதிகளவிலான பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் வானில் ஹெலிகொப்டரும் வட்டமிட்டது. இதனால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பண்ணையாளர் களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி கனகரத்தினம் சுகாஷ் உள்ளிட்ட அரசியல்வாதிக ளும், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதி களும், பொதுமக்களும் கலந்துகொண் டனர்.

## பணிப்பெண்கள்...

வல்கம பிரதேசங்களைச் சேர்ந்த இரண்டு பெண்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்றுக் காலை வீட்டு உரிமையாளர் வீட்டை விட்டு வெளியேறி மாலையில் வீடு திரும்பிய போது வீட்டுப் பணிப் பெண்கள் இருவரும் காணாமல்போயி ருந்தனர்.

வீட்டின் பின்பக்க கதவு திறந்திருந்ததை யடுத்து, பணிப்பெண்கள் இருவரும் வீட்டில் இல்லாததால், உரிமையாளர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார்.

பொலிஸார் நடத்திய விசாரணையில் 67 மற்றும் 70 வயதுடைய இரு பெண் களும், பணிப்பெண்களுக்கென ஒதுக் கப்பட்ட குளியலறை மற்றும் கழிவறைப் பகுதிகளில் படுகொலை செய்யப்பட்டி ருந்தமை தெரியவந்துள்ளது.

இதன்போது அறை அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த தங்கம் அல்லாத 12 வளையல்கள், 2 அட்டியல்கள், ஒரு தங்க கரண்டி, வெளிநாட்டு நாணயங்கள் உள்ளிட்ட பல்வேறு பெறுமதியான பொருட் கள் காணாமல்போயிருந்ததமை கண்டு பிடிக்கப்பட்டது.

சம்பவத்துடன் தொடர்புடையதாக நம்பப்படும் மாத்தறை, துடாவ பிரதேசத் தில் வசிக்கும் 25 வயதுடைய சந்தேகநபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய் துள்ளனர்.

சந்தேகநபர் வசம் இருந்த திருடப்பட்ட பொருட்களையும் பொலிஸார் கைப் பற்றியுள்ளனர்.

## எந்தத் தடை...

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரி வித்தார்.

மயிலத்தமடு – மாதவனை மேய்ச்சல் தரை பண்ணையாளர்களுக்கு நீதி கோரி மட்டக்களப்பு – கொம்மாதுறையில் இன்று நடைபெற்ற மாபெரும் போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

# கலாசாலையின் நூற்றாண்டு நடை பவனி செவ்வாயன்று!

## புதன் இடம்பெறும் இறுதி நிகழ்வில் கல்வி அமைச்சர் சுசில் கலந்து கொள்கிறார்

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு செவ்வாய்க்கிழமை நடை பவனி இடம்பெறவுள்ளது.

நல்லூர் கோவில் பின்புறத்தில் இருந்து பருத்தித்துறை வீதி வழியாக கோப்பாய் ஆசிரிய கலாசாலைவரை இந்த நடை பவனி இடம்பெறவுள்ளது.

செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபவனி ஆரம்பமாகி இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறுநாள் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நிறைவு விழா நிகழ்வுகள் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

இறுதி நாள் நிகழ்வில் கலாசாலையின் நூற்றாண்டு சஞ்சிகையாகிய 'கலைமலர்' வெளியீடு, அஞ்சல் திணைக்களத்தின் இருபத்தைந்து ரூபா முத்திரை வெளியீடு, முதல்நாள் அஞ்சல் உறை வெளியீடு என்பன சிறப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளன.

அத்துடன் முன்னாள் அதிபர்கள் கௌரவிப்பும் இடம்பெறவுள்ளது என்று கலாசாலை அதிபர் ச.லலீசன் தெரிவித்தார்.




# ஆரோக்கியத்தை அடகு வைத்துவிட்டு பெறும் எவையும் பயன் தந்துவிடாது!

## வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ்

(றியாஸ் ஆதம்)

ஆரோக்கியத்தை அடகு வைத்துவிட்டு நாம் கற்கின்ற கல்வியும், சம்பாதிக்கின்ற பணமும், பொருளாதாரமும் எந்தப் பயனையும் பெற்றுத் தறாது.

இவ்வாறு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

மாணவர்களின் உணவு பாதுகாப்பு மற்றும் சுகாதார மேம்பாடு தொடர்பில் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு தெளிவூட்டும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு-

ஒரு மனிதனின் ஆரோக்கியத்துக்குப் போசாக்கு உணவு மிகவும் அவசியமானதொன்றாகும். குறிப்பாகப் பாடசாலை சிற்றூண்டிச் சாலைகளில் போசாக்கற்றதும் தரமற்றதுமான உணவுகளே விற்கப்படுகின்றன. இதனை மாணவர்கள் உட்கொண்டு எந்தப் பயனும் கிடையாது. மாணவர்களின் கற்றல் மேம்பாட்டுக்கு சுகாதாரமானதும் போசாக்குமிக்கதுமான உணவுகளே அவசியமாகும்.



பாடசாலை மாணவர்களின் உணவு பாதுகாப்பு மற்றும் சுகாதார மேம்பாடு தொடர்பில் சகல தரப்பினரும் அவதானம் செலுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும். இல்லையெனில் ஆரோக்கியமற்றதொரு சமூகத்தை உருவாக்கிய நிலை ஏற்படும். ஆரோக்கியமற்ற சமுதாயத்தை உருவாக்கிக் கொண்டு அவர்களுக்கு கல்வி போதித்து எந்தவொரு முன்னேற்றத்தினையும் அடைய முடியாது.– என்றார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் சுற்றுச் சூழல், தொழில், சுகாதாரம் மற்றும் உணவு பாதுகாப்புப் பிரிவால் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர் எம்.பீ.அப்துல் வாஜித், சுற்றுச் சூழல், தொழில், சுகாதாரம் மற்றும் உணவு பாதுகாப்புப் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ். எம். பௌஸாத் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## எதிர்பார்த்தது நடக்கின்றது

யுத்த காலத்தில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல் விவகாரங்களுக்குப் பொறுப்புக் கூறும் விடயம் தொடர்பில் கடந்த 15 வருடங்களாக உருப்படியாக எதுவும் செய்யாமல், வேண்டுமென்றே காலத்தை இழுத்தடித்து, அசட்டையாகவே நடந்து வந்த இலங்கை, இப்போது புதிதாகத் தான் அமைக்க இருப்பதாகக் கூறும் 'உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு' மூலம் ஏதோ பெரிதாகச் சாதித்து விடப் போவதாகக் கயிறு விடுகின்றது.

சர்வதேச சமூகத்தைத் திசை திருப்பி, மேலும் காலத்தை இழுத்தடிக்கும் எத்தனமாகவே இந்த முயற்சி எடுக்கப்படுவதாக சுட்டிக்காட்டி உள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் இந்த விடயத்தை ஒட்டி தெரிவித்துள்ள சில கருத்துக்கள் நோக்கற் பாலவை. அவை :-

■ கடந்த பல ஆண்டுகளாக இலங்கை பத்துக்கும் மேற்பட்ட ஆணைக்குழுக்களை நிறுவியும் எந்த முடிவும் இல்லை. ஆணைக்குழுக்களை நிறுவுதல் என்பது சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கான இலங்கையின் கருவியாகும்.

■ தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுடன் ஒப்பிட்டுத் தன்னை நியாயப்படுத்த இலங்கை திட்டமிட்டுள்ளது. ஆனால் இரண்டுக்கும் இடையே ஒரு பெரிய வேறுபாடு உள்ளது. தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணையம் என்பது பாதிக்கப் பட்டவர்களால் முன்மொழியப்பட்டதும் நிர்வகிக் கப்பட்டதுமாகும். ஆனால் இலங்கையில் பாரிய அட்டூழியங்களை நிகழ்த்திய வெற்றியாளர்களே இதனை முயற்சியை இங்கு முன்வைக்கின்றனர்.

■ இதேபோன்ற வழிகளில் தொடங்கப்பட்ட முந்தைய 'உண்மைக்கான ஆணையங்கள்' தோல்வி யடைந்துள்ளன. ஏனெனில் நியமிக்கப்பட்ட ஆணை யங்கள் பாதிக்கப்பட்டவர்கள் நம்பவில்லை. ஆணை யங்களிடம் வாக்குமூலம் வழங்க முன்வந்த பல பாதிக்கப்பட்டவர்கள் பல்வேறு தரப்பினராலும் மிக மோசமாக அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர்.

- இப்படி நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் குறிப்பிடும் கருத்துகளில் நிறைய அர்த்தங்கள் உண்டு.

யுத்தக் குற்றச்சாட்டு விடயத்தில் குற்றம் சுமத்தப்படும் தரப்பு இலங்கை நாடும் அதன் அரசும்தான்.

குற்றம் சுமத்தப்பட்டவரே விசாரணை நடத்தும் தரப்பாக இருந்தால் விசாரணை நடக்கும், நீதியான விசாரணை இடம்பெறும், நீதி நியாயம் நிலைநாட்டப்படும் என்றெல்லாம் நம்புவது பெரும் அபத்தமாகும்.

உண்மை, நீதி, நியாயமான விசாரணை ஒன்று நடத்தப்பட்டால் என்னவாகும் என்பது கொழும்புக்குத் தெரியும். அதனால் தானே குற்ற வாளி என்பது உறுதிப்படுத்தப்படாமல் தவிர்க்கச் செய்வதற்கான பித்தலாட்டங்களையும் அது தொடர்ந்து முன்னெடுக்கும். அதுதான் நடக்கின்றது.

## சான்றிதழ்களில் தவறு ஏற்பட்டால் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை!

அதிகாரிகளின் கவனயீனம் காரணமாக பிறப்பு, இறப்பு மற்றும் மரண சான்றிதழ்களில் தவறுகள் ஏற்படும் பட்சத்தில் அந்த அதிகாரிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

உள்விவகார இராஜாங்க அமைச்சின் முன்னேற்ற கூட்டம் நேற்று (07) இடம்பெற்ற போதே இந்த ஆலோ சனை வழங்கப்பட்டுள்ளது.

பதிவாளர் திணைக்கள அதிகாரிகளுக்கே இராஜாங்க அமைச்சரால் இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

சான்றிதழ்களில் தவறுகள் ஏற்படுவதை தவிர்த்துக்கொள்ளுமாறு இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் அதிகாரிகளின் கவனயீனம் அதிளவில் தவறுகள் ஏற்பட்ட நிலையில், இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.



## நீர் வழிந்தோடும் வகையில் வீதிகளைப் புனரமையுங்கள்

### கெருடாவில் மக்கள் கோரிக்கை

(த.சுபேசன்)

சாவகச்சேரி-பருத்தித்துறை இணைப்பு வீதி (துபாற்கந்தோர் வீதி) புனரமைப்புப் பணியின் போது நீர் வடிந்தோடுவதற்கான ஏற்பாடுகளையும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மேற்கொள்ள வேண்டும் என்று சாவகச்சேரி கெருடாவில் மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

இது தொடர்பாக அந்த் மக்கள் கருத்துத் தெரி விக்கையில்-

சாவகச்சேரி-பருத்தித்துறை வீதி (துபாற்கந்தோர் வீதி) புனரமைப்புப் பணி தற்போது துரித கதியில் இடம்பெற்று வருகிறது.

இந்த நிலையில் கெருடாவில் பகுதியில் மாரி காலத்தில் வெள்ள நீர் வழிந்தோடி குளத்துக்குச் செல்லும் வகையில் கெருடாவில் சந்தியில் வீதியை சற்று தாழ்வாக அமைக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் கோரிக்கை விடுத்திருந்தோம்.

கடந்த காலத்தில் எமது கோரிக்கையை நிறைவேற்றித் தருவதாக உறுதியளித்த மேற்படி திணைக்களம் தற்போது அதனை மறுத்து காபெட் இடுவதற்கான பணிகளை இரவிரவாக முன்னெடுத்து வருகிறது.

கெருடாவில் சந்தியில் நீர் பாய்வதற்கான வழிவகை களை ஏற்படுத்தாத பட்சத்தில் மாரி காலத்தில் அப்பகுதி மக்கள் கடும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும்.

எனவே இதனைக் கருத்தில் கொண்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் நீர் வழிந்தோட ஏற்ற வகையில் துபாற்கந்தோர் வீதியை புனரமைக்க வேண்டும்.

இந்த வீதி அபிவிருத்தி மக்களின் இயல்பு வாழ்வை பாதிக்கக்கூடாது.- என்று தெரிவித்தனர்.



# மாகாண மட்ட தமிழ் மொழிதின போட்டிகளில் ஒலுவில் சாதனை

**(எஸ்.அஷ்ரப்கான்)**

மாகாண மட்ட தமிழ் மொழி தின போட்டிகளில் ஒலுவில் அல்–ஹம்றா மகா வித்தியாலய மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் இடம் பெற்ற இந்தப் போட்டிகளில் தனிநடிப்பு பிரிவு நான்குக்கான போட்டி இடம்பெற்றது.

இப்போட்டியில் ஒலுவில் அல்–ஹம்றா மகா வித்தியாலய மாணவன் எம்.எஸ்.சபியுல் அஸ்மான் இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்டார்.

பிரிவு 05 அறிவிப்பாளர் போட்டி திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் இடம்பெற்றது. இந்தப் போட்டியில் குறித்த பாடசாலை மாணவி எஸ்.றிஸ்மத் றிழா மூன்றாம் இடத்தை பெற்றார்.

பிரிவு 4 கட்டுரைப் போட்டியில் இப் பாடசாலை மாணவி எம்.கே.ஹம்ஸத் ஹமாஸா இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டார்.

இந்த மாணவர்கள் மூவரும் மாவட்ட மட்ட போட்டியில் முதலிடம் பெற்று மாகாண மட்டத்துக்குத் தெரிவாகியிருந்தனர்.

இவர்களைப் பயிற்றுவித்த தமிழ் பாட ஆசிரியர் கலைப்பிறை ஜே.வஹாப்தீன் உட்பட அதிபர் அஷ்–ஷெய்க் யு.கே. அப்துர் ரஹீம் மற்றும் பிரதி அதிபர், உதவி அதிபர்கள், ஆசிரியர்களுக்கும் பாடசாலை சமூகம் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.

# லங்கை செஞ்சிலுவைச் சங்க பதுளை மாவட்ட கிளை முதலுதவி

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பதுளை மாவட்ட கிளையால் மஹியங்கன ரஜமகா விகாரையில் இடம்பெறும் வருடாந்த பெரஹெர நிகழ்வில் கலந்து கொண்ட பக்தர்களுக்குத் தேவையான முதலுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தச் செயற்பாட்டுக்கு மஹியங்கனப் பிரதேச செயலாளர் உள்ளிட்ட உத்தியோஸ்தர்கள் பெரும் பங்களிப்பினை வழங்கியிருந்தனர்.






# கல்முனையில் ஆசிரியர் தின நிகழ்வு

**(ஏ.எல்.எம்.ஷினாஸ் )**

கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை ஏற்பாடு செய்த சர்வதேச ஆசிரியர் தின நிகழ்வு பாடசாலையின் அதிபர் எஸ்.கலையரசன் தலைமையில் நடைபெற்றது.

பாடசாலையின் உயர்தர மாணவர்கள் ஏற்பாடு செய்து நடத்திய இந்த ஆசிரியர் தின நிகழ்வில் மாணவர்களுக்கு வழி காட்டும் ஆசிரியர்கள், மாணவர்களால் மாலை அணிவிக்கப்பட்டு நினைவுப் பரிசும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.








# மன்னார் கலை பண்பாட்டு பெருவிழா!

(மன்னார் நிருபர்)

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் , விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் அனுசரணையுடன், மன்னார் மாவட்டச் செயலகமும் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டு பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த மன்னார் மாவட்ட கலை பண்பாட்டு பெருவிழா நேற்று வெள்ளிக்கிழமை (6) இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் ஜே.பரந்தாமன் தலைமையில் இடம்பெற்ற விழாவில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக்டிறஞ்சனும் சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் திருமதி லா.நிருபராஸ்ம் கலந்து கொண்டனர்.

விருந்தினர்கள் மன்னார் நகர சுற்றுவட்டத்தில் இருந்து மாலை அணிவிக்கப்பட்டு வாத்திய இசையுடன் மாவட்ட செயலகம்வரை அழைத்து வரப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து தமிழ் தாய்க்கு மாலை அணிவிக்கப்பட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.



# விளையாட்டுக் கழகத்துக்கு புதிய சீருடை அறிமுகம்

(றியாஸ் ஆதம் )

பொத்துவில் றபா விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும், புதிய சீருடை அறிமுக நிகழ்வும் நேற்று முன்தினம் (06) பொத்துவில் பொது நூலக கேட்போர் கூடத்தில் கழகத்தின் தலைவர் சட்டத்தரணி ஏ.எம்.சாதிர் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் கழகத்தின் செயலாளர் ஏ.பி.ஜெஸ்வத் இலாஹி, முகாமையாளர் எம்.ஏ.கபூர், கிரிக்கெட் அணியின் தலைவர் சுர்பின் மற்றும் கழகத்தின் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கழகத்தின் புதிய தலைவராக சட்டத்தரணி சாதிர் செயலாளராக ஜெஸ்வத் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

றபா விளையாட்டுக் கழகத்தின் கிரிக்கெட் அணியினருக்காக கொள்வனவு செய்யப்பட்ட புதிய சீருடையை கழகத்தின் தலைவர் சட்டத்தரணி சாதிர் இந்த நிகழ்வின் போது அறிமுகம் செய்து வைத்தார்.

# மாணவர்கள் கௌரவிப்பு!






(எஸ். சினீஸ்கான் )

பட்டியடிப்பிட்டி அர்-றஹீமியா வித்தியாலயத்தின் 2022 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசில் வழங்கலும் கௌரவிப்பும் பாடசாலையின் அதிபர் திருமதி பரீதா நிப்றாஸ் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் வியாழக்கிழமை (5) நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷேய்க் ஏ.எம். றஹ்மதுல்லாஹ் மற்றும் வலயக்கல்வி பணிமனையின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



# சேவை நலன் பாராட்டு விழா

(எம்.எம்.றம்ஸீன்)

சாய்ந்தமருது அல் ஜலால் வித்தியாலயத்தில் சேவையாற்றி, ஆசிரியர் தினத்தில் தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் பாடசாலையின் உதவி அதிபர் எம்.ஐ.எம். முபாறக்கின் சேவைநலன் பாராட்டுவிழா பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். சைபுதீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.எம்.ஏ. மலீக், விசேட அதிதியாக பாடசாலையின் ஈ.பி.எஸ்.ஐ. இணைப்பாளர் திருமதி. அஸ்மா மலீக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கல்வி சாரா ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# ஒலுவில் ஆசிரியர் தின விழா!

(கே. எ. ஹமீட் )

ஒலுவில் அல் - மதீனா வித்தியாலயத்தில் ஆசிரியர் தின விழா வெள்ளிக்கிழமை (06) இடம்பெற்றது.

இவ் விழாவில் தென்கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் எஸ்.எம். ஐயூப் பிரதம அதிதியாகவும் வலயக் கல்விப் பணிமனை பாடசாலை அபிவிருத்தி இணைப்பாளர் யூ.எல். இஸ்திக்கீன் சிறப்பதிதியாகவும் கலந்து கொண்டனர்.




# கிழக்கு மாகாண பாடல் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பாராட்டு

(எம். எப். நவாஸ்)

கிழக்கு மாகாண அரச பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கான பாடல் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு நினைவுச் சின்னமும் பாராட்டு பத்திரமும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு நேற்று (7) மட்டக்களப்பு மெதடிஸ் மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ச.நவநீதன் தலைமையில் இடம்பெற்றது.

இங்கு வெற்றி பெற்ற திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பணிபுரியும் அரச உத்தியோகத்தர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம். ஏ. சி. அகமது ஷாபிருக்கு "கிழக்கின் மதுரக் குர லோன்" எனும் பட்டமும், கே. எம். கபீருக்கு "கிழக்கின் வதனக்குரலோன்" எனும் பட்டமும், எம்.பியாஸ்'க்கு "கிழக்கின் பாடகர் திலகம்" எனும் பட்டமும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் அரச அதிபர் கலாமதி பத்மராஜாவும் கௌரவ அதிதிகளாக மட்டக்களப்பு வலய பிரதிக் கல்வி பணிப்பாளர் ஷாமினி ரவிராஜா, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜி. சுகுணன், காத்தான்குடி பிரதேச செயலர் உ. உதயஶ்ரீதர், கல்முனை வடக்கு பிரதேச செயலர் திரு அதிசயராஜ், அம்பாறை மாவட்ட கலாச்சார ஏ எல். தௌபீக், கலாச்சார உத்தியோத்தர் எம் எஸ்.ஜௌபர் மற்றும் புகழ்பெற்ற கவிஞர் சோலைக்கிளி ஆகியோரும் கலந்து கொண்டனர்.





# இணைந்த கரங்கள் அமைப்பால் விளையாட்டு உபகரணம் வழங்கல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மொனறாகலை மாவட்டத்தில் உள்ள சரஸ்வதி வித்தியாலயத்தில் பாடசாலை மட்டம், கோட்ட மட்டம் வலயம் மட்டம் , மாகாண மட்டங்களில் இடம்பெற்ற விளையாட்டு போட்டிகளில் பங்கு பற்றி பாடசாலைக்கு பெயரையும் புகழையும் ஈட்டிக் கொடுத்து தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலையின் அதிபர் எம்.சுதாகரன் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மொனறாகலை மாவட்ட வலயக் கல்வி அலுவலக சுகாதார உடற்கல்வி பாட வலயக்கல்விப் பணிப்பாளர் பண்டார, மொனறாகலை பொலிஸ் நிலையப் பிரிவு அதிகாரி சில்வா மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் கணேசலிங்கம், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

உலகில் மனிதன் எதற்காகப் படைக்கப்படுகிறான்? இங்கு பிறக்கும் உரிமை ஒருவனுக்கு கொடுக்கப்பட்டிருக்கும்போது அவன் இறப்பை தேர்வு செய்யும் உரிமையை ஏன் அவன் நிர்ணயித்துக் கொள்கின்றான். ஒருவனுடைய மரணம் என்பது சோகமானது அதனினும் தற்கொலை என்பது ஏற்றுக் கொள்ளப்பட முடியாத அளவுக்குச் சோகமானது.

தற்கொலைகளின் முடிவுகள் அவர்களை மட்டும் அல்ல அவர்களைச் சுற்றி இருக்கும் அனைவரையும் பாதிக்கும். இவ்வுலகில் மனித இனத்தைத் தவிர வேறு எந்த உயிரினமும் தற்கொலை செய்வதாக அறியப்படவில்லை. ஆனால் ஆறறிவு உள்ள இந்த மனிதன் இவ்வாறான தவறான முடிவை தேர்ந்தெடுப்பது என்பது முற்றிலும் முட்டாள்தனம்.

இன்று உலகம் நவீன மயப்பட்டுக் கொண்டிருக்கையில் சின்ன சின்ன விஷயங்களுக்காக தவறான முடிவை தேர்வு செய்கின்றனர். ஏமாற்றங்களையும் தோல்விகளையும் ஏற்றுக் கொள்ளத் தெரியாமல் சுற்றத்தின் நெருக்கடி காரணமாக மனமுடைந்து இவ்வாறான பொருத்தமற்ற தவறான முடிவை எடுக்கின்றனர்.

மன அழுத்தம், காதல் தோல்வி பரீட்சையில் தோல்வி , தொழிலில் தோல்வி சமூக பொருளாதார நெருக்கடி , கடன் சுமை வேலை இல்லாமல் உடல் வலி, நோய்கள், அவமானம், தனிமை, கோபம், விரக்தி, சமூக நெருக்கடி, வாழ்வு பற்றிய குழப்பம், குடும்பத்தகராறு, குழந்தையின்மை, போதைக்கு அடிமை, வறுமை, போன்ற காரணங்கள் தற்கொலைக்கு ஏதுவாக இருக்கின்றன.

தற்காலத்தில் தற்கொலைக்கு ஒரு காரணமாக போதை வஸ்து பாவனையும் இளைஞர்கள் மத்தியில் அதிகரித்து செல்வதை கூறிக் கொள்ளலாம். இதனைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட திணைக்களம் நடவடிக்கை எடுக்கின்றதா என்றால் அதுவும் கேள்விக் குறியாகி வருகின்றது.

தற்கொலைகள் ஒரே ஒரு காரணத்தால் நிகழ்வது போல தோன்றினாலும் உண்மை அதுவல்ல ஒவ்வொரு தற்கொலையின் பின்னணியிலும் பல வேறு உயிரியல், உளவியல், மற்றும் சமூகக் காரணிகள் உள்ளன.

முன்னைய காலங்களில் தற்கொலைக்கு முக்கிய காரணம் கல்வியறிவு இன்மைதான் என்று நம்பப்பட்டு வந்தது. ஆனால் இன்றைய காலத்தில் கல்வியறிவு உள்ளவர்களும் சினிமா, டிவி பிரபலங்கள், பொறியியல், மருத்துவ மாணவர்கள் ஆசிரியர்கள், தொழிலதிபர்கள் என்று படித்தவர்களது தற்கொலைகள் தான் அதிகமாக நடைபெறுகிறது.

தற்கொலை என்பதை வெறும் ஒரு மன நோயாகவோ அல்லது தனிமனித முடிவு என்றோ ஏற்றுக் கொள்ள முடியாது.

இந்தச் சமுதாயத்தில் இருக்கும்



# மீண்டும் ஏன் அதே தவறு...?

ஒவ்வொருவருக்கும் இதில் பங்கு உண்டு. பெற்றோர், ஆசிரியர், அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள் என்று இங்குள்ள அனைத்து தரப்பினருக்கும் இந்த தவறான முடிவுக்கு பங்குண்டு.

இலங்கையிலும் அதிகமாக தற்கொலைகள் தற்போது நடந்து கொண்டு வருகின்றன. சமீப காலங்களில் செய்தித் தாள்களிலும், நாளிதழ்களிலும், சமூக ஊடகங்களில் என அதிகம் வருகின்ற கவலைக்குரிய செய்தியாக தற்கொலைச் செய்தி காணப்படுகிறது.

இக்காலத்தில் தற்கொலைச் செய்தி பற்றிய செய்தித்தாள்கள் இல்லாத நாள்களே கிடையாது.

இதற்கு முக்கிய காரணம் தற்கொலை ஏன் நடக்கிறது என்பது பற்றிய புரிதல் நம்மிடம் இல்லாமல் இருப்பதுதான்.

அண்மையில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியாகத் தவறான முடிவுகளை எடுத்துத் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்ளும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு செல்கிறது.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு வாரத்தில் மாத்திரம் 4 தற்கொலைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. யாழ்ப்பாணத்தில் பல்கலை மாணவர்கள் இருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள்.

அண்மைய காலப் பகுதியில் இவ்வாறான சம்பவங்கள் தமிழ் சமூகத்தில் என்ன நிலை என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

தற்கொலை தவறான முடிவு. ஒவ்வொரு மனிதனுக்கும் பிரச்சினைகள் பல உண்டு. பிரச்சினைகள் இல்லாத மனிதர்கள் என்று யாரும் இல்லை அனைத்து பிரச்சினைகளுக்கும் என ஒரு தீர்வு உண்டு. பிரச்சினைகளுக்கு உரிய தீர்வாக ஒரு போதும் தற்கொலை அமையாது.

இவ்வாறான தற்கொலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் பல விதங்களில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எதிர்கால சந்ததியினருக்கு நல்ல விதங்களிலே வழிகாட்டியாக இருக்க வேண்டும்.ஆனால் இந்தத் தற்கொலைச் செயற்பாடு அவர்களைத் தவறான பாதைக்கு வழி காட்டுவதாக அமைந்துவிடும்.

தற்கொலை செய்து கொள்பவர்களை அல்லது தற்கொலை செய்ய முயற்சிப்பவர்களை எவராலும் தடுக்க முடியாது. இவ்வாறான முயற்சி செய்யும் மன நிலையில் இருந்து அவர்களே மாறுபட வேண்டும்.

தற்கொலை செய்து கொள்ளும் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். முன்னோக்கியே நகர்கின்ற உங்கள் வாழ்க்கையை சற்று பின்னோக்கியும் யோசித்துப் பாருங்கள். உங்களுடைய எதிர்கால வாழ்க்கை, இலட்சியக் கனவு, பெற்றோர்கள், உறவுகள் என ஒவ்வொன்றையும் சிந்தித்துப் பாருங்கள் எந்த ஒரு பிரச்சினைக்கும் மரணம் முடிவல்ல. சரியான முடிவை தேடிக் கொள்ளுங்கள். தற்கொலை எனும் தவறான முடிவு எடுப்பதை நிறுத்திக் கொள்ளுங்கள். தற்கொலை செய்து கொள்வதற்கான முடிவை எடுப்பதற்கு முன் இரண்டு, மூன்று தடவை சிந்தியுங்கள்.

இந்தத் தற்கொலையைத் தடுக்கும் விதமாகவே உலக தற்கொலை தடுப்பு தினமான செப்டம்பர் 10 அனுஷ்டிக்கப் படுகிறது.

தற்கொலை என்பது ஒரு தவறான முடிவு என்பது எல்லோர் மனதிலும் ஆழமாகப் பதிந்திருக்க வேண்டும். தற்காலத்தில் படித்தவர்கள் கூட இந்த தவறான முடிவை எடுத்துக் கொள்ளும் போது படித்த படிப்புக்கே மதிப்பின்றிப் போகின்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் ஏன் அதே தவறு...?

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்கொலை என்பது ஒரு கோழைத் தனமான செயல் ஆனால் அதனை வீரச் செயல் போல் செய்து கொள் கின்றனர். இலங்கையில் இந்த நிலை மாற வேண்டும் இனிவரும் காலங் களிலாவது இத் தவறான முடிவை மேற்கொள் கின்றவர்களின் எண்ணிக்கை குறை வடைய வேண்டும்.

இந்த நிலையில் இருந்து மாறுபட்டு மனித வாழ்க்கையின் ஆழத்தை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். எந்த துன்பம் வந்தாலும் எதையும் தாண்டி அதனைச் சரி செய்து கொள்ளும் மனத் தைரியம் படைத் தவர்களாக காணப்பட வேண்டும்.

எதுவுக்குமே தற்கொலை என்கின்ற ஒரு தவறான முடிவு தீர்வாகாது. அது தவறான முடிவு என்பது அனைவரது மனதிலும் ஆழமாக பதிந்திருத்தல் வேண்டும். தற்கொலை என்பது ஒரு தவறான முடிவு என்பது எல்லோர் மன திலும் ஆழமாக பதிந்திருக்க வேண்டும்.

படித்தவர்கள் கூட இந்த தவறான முடிவை எடுத்துக் கொள்ளும்போது படித்த படிப்பிற்கே மதிப்பின்றி போகின்றது தற்கொலை என்பது ஒரு கோழைத் தனமான செயல் ஆனால் அதனை வீரச் செயல் போல் செய்து கொள் கின்றனர். இலங்கையில் இந்நிலை மாற வேண்டும் இனிவரும் காலங் களிலாவது இந்தத் தவறான முடிவை மேற்கொள்கின்றவர்களின் எண்ணிக்கை குறைவடைய வேண் டும். இந்த நிலையில் இருந்து மாறு பட்டு மனித வாழ்க்கையின் ஆழத்தை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். எந்தத் துன்பம் வந்தாலும் எதையும் தாண்டி அதனைச் சரி செய்து கொள்ளும் மனத் தைரியம் படைத்த வர்களாக காணப்பட வேண்டும்.எதுவுக் குமே தற்கொலை என்கின்ற ஒரு தவ றான முடிவு தீர்வாகாது. அது தவறான முடிவு என்பது அனைவரது மனதிலும் ஆழமாகப் பதிந்திருத்தல் வேண்டும்.

சி.கதீசனா
2 ஆம் வருடம், ஊடகக் கற்கைகள்
யாழ். பல்கலைக்கழகம்.

# வடக்கு - கிழக்கு மாகாணத்தில் குறைவாகவே மழை கிடைக்கும்

**யாழ். பல்கலைக்கழகத்தின் புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா இன்று தெரிவிப்பு**

2023 ஆம் ஆண்டு எல்நினோ ஆண்டு என்பதால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் வட கீழ்ப் பருவ மழை சராசரி மழையை விட (550மி.மீ) 14வீதம் தொடக்கம் 19 வீதம்வரை குறை வாகவே கிடைக்கும் வாய்ப்புள் ளது.

இந்தத் தகவலை இன்று (08) யாழ். பல்கலைக்கழகத்தின் புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

2023 - 2024 வடகீழ் பருவ மழைக் கான எதிர்வு கூறல் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளவை வருமாறு-

2023 ஆம் ஆண்டு எல்நினோ ஆண்டாக இருந்தாலும் இந்த ஆண்டும் வடகீழ் பருவக் காற்றுக் காலத்திலும் நான்கு முதல் ஆறு தாழமுக்கங்கள் தோன்றும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆறு சந்தர்ப்பங்களில் செறிவான மழை கிடைக்கும் என்று எதிர்பார்க் கப்படுவதால் இந்த ஆண்டும் எமக்கு மூன்று சந்தர்ப்பங்களில் (நவம்பர் 20 முதல் டிசெம்பர் 05 வரை, டிசெம்பர் 10 முதல் 22 வரை, டிசெமபர் 26 முதல் 2024 ஜனவரி 08 வரை - இந்தத் திக திகளில் இருந்து ஒரு சில நாள்கள் முந்தலாம் அல்லது பிந்தலாம்) வெள்ள அனர்த்தங்களுக்கான வாய்ப்புகள் உள்ளன.

இரண்டாவது இடைப்பருவ காலத்தில் கிடைக்க வேண்டிய சராசரி மழையின் 38 வீதம் மட்டுமே கிடைக்கும். (இந்தக் காலப் பகுதியில் இன்றுவரை (08) கிடைத்திருக்க வேண்டிய மழையின் அளவு 80மி.மீ. கிடைத்திருப்பது 43 மி.மீ.)

இன்று முதல் (08) 12 ஆம் திகதிவரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் பரவலாக மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

அதற்குப் பின்னர் இந்த மாதம் 24



ஆம் திகதிக்கு பின்னரே சற்று மிதமான மழை கிடைக்கத் தொடங்கும். அது 03.11.2023 வரை தொடரக்கூடும்.

காலநிலை மாற்றம் காலநிலைப் பருவகாலங்களின் தொடக்க காலம் மற்றும் முடிவுறும் காலங்களில் பாரிய அளவு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதனை நாம் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்.

இவ்வாண்டு தென்மேற்கு பரு வக்காற்று இலங்கைக்கு ஜுலை நடுப் பகுதியிலே வீசத் தொடங்கியது. வழமை யாக செப்டம்பர் 10 ஆம் திகதியோடு விலக வேண்டிய தென்மேற்கு பருவக் காற்று ஒக்ரோபர் 14 ஆம் திகதிக்கு பின்னரே படிப்படியாகப் பின்வாங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (கொழும்பு உட்பட்ட மேல் மாகாணத்தின் பல பகுதிக ளுக்கும் தற்போது கிடைக்கும் கன மழை இவ்வாரமும் நீடிக்கும்.)

வடகீழ் பருவக்காற்று நவம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு பின்னரே இலங்கைக்கு (திருகோணமலையே வடகீழ் பருவக் காற்றின் முதல் வீசலை சந்திக்கும்) வீசத் தொடங்கும்.

வழமை போன்று அல்லாமல் இம்முறை வடகீழ்ப் பருவக்காற்றின் காலம் குறைவாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே வடகீழ் பருவக் காற்றின் மழை நாள்கள் 21 முதல் 27 ஆகவே இருக்கும்.

விவசாயிகள் எதிர்வரும் 12 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் கிடைக்கும் மழையைப் பொறுத்து விதைப்புச் செயற்பாடுகளை தீர்மா னிக்கலாம்.

நீண்ட கால நெல்லினங்களை விதைக்காது குறுங்கால விதையினங் களை விதைப்பதன் மூலம் 2024 ஜனவரிக்கு பின்னான காலப் பகுதியில் நீர்ப்பாசன நீரை எதிர்பார்க்கத் தேவை யில்லை. அத்தோடு அடுத்த ஆண்டு சிறுபோக விதைப்பையும் இது பாதிக்கும்.

இயலுமானவரை சேற்று விதைப் புக்கான பெருமழையை எதிர்பாராது புழுதி விதைப்புக்கான சந்தர்ப்பங்களை பயன் படுத்துதல் வேண்டும்.

ஒக்ரோபர் 20 ஆம் திகதிக்கு முன்ப தாக எமது சூழலில் காணப்படும் மரங்களின் விதானங்களை குறைத்தல், கிளைகளை வெட்டுதல் வேண்டும். இதன் மூலம் கடும் மழை மற்றும் காற்றால் அந்த மரங்களின் மூலம் ஏற்படும் ஆபத்தைத் தவிர்க்கலாம்.

அடிக்கடி நடமாடும் பகுதிகளின் பள்ளமான பகுதிகளை அடையாளப் படுத்தி வைத்திருத்தல் வேண்டும்.

எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன் னதாக மழைக் காலம் ஒன்றை எதிர் கொள்வதற்கான தயார்ப்படுத்தல்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

அதிகளவு இடிமின்னல் நிகழ்வுகள் இடம்பெறும் வாய்ப்புள்ளதால் அவற் றின் பாதுகாப்பு முறைகளை அறிந்து வைத்திருத்தல் வேண்டும்.

எமது வீடு, தொழிலிடம், பாடசாலை கள், வைத்தியசாலைகள் போன்ற சேவைமையங்கள், எமது போக்குவரத்து பாதைகளில் உள்ள பட்ட மரங்கள், சேதமடைந்த மின்கம்பங்கள் மற்றும் தொலைத்தொடர்பு கம்பங்கள் போன் றன கன மழையால் அல்லது வேகமான காற்று வீசலால் ஆபத்தை ஏற்படுத்தும் விடயங்கள் தொடர்பில் உரிய தரப்புக் களுக்கு அறிவித்து அவற்றை அகற் றுதல் வேண்டும்.-என்றுள்ளது.

# இஸ்ரேல் - பாலஸ்தீன போர் தீவிரம்; காசா பகுதியில் 313 பேர் உயிரிழப்பு!



போரில் நூற்றுக்கணக்கான ஹமாஸ் பயங்கரவாதிகளை வீழ்த்தியுள்ளோம் என்று இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலை குறிவைத்து நேற்று பாலஸ்தீனத்தின் ஹமாஸ் தீவிரவாதிகள் ராக்கெட் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர். இதற்குப் பதிலடியாக இஸ்ரேல் விமானப் படையின் போர் விமானங்கள் பாலஸ்தீனத்தின் காசா நகரம் மீது குண்டுமழை பொழிந்தன.

இந்த நிலையில் இரண்டாவது நாளாக இன்றும் இரு தரப்புக்கும் இடையே கடும் மோதல் இடம்பெற்று வருகின்றது.

கடும் போரினால் காசா பகுதியில் மட்டும் 313 பேர் உயிரிழந்துள்ளனர். 1700 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இதனை பாலஸ்தீன இராணுவமும் உறுதி செய்துள்ளது.

இதற்கிடையில் மத்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் வி.முரளீதரன் இன்று செய்தியாளர்களை சந்தித்த போது, இஸ்ரேலில் சிக்கியுள்ள இந்தியர்கள் பாதுகாப்பாக இருக்கின்றனர். தேவைப்படின் தூதரகத்தைத் தொடர்பு கொள்ளவும். ஏற்கெனவே அரசு இது தொடர்பாக அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இஸ்ரேலில் உள்ள இந்தியத் தூதரகம் தேவையான அனைத்து உதவிகளையும் செய்யும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல் பாலஸ்தீனத்தில் உள்ள இந்தியர்கள் உதவி தேவைப் படின் இந்தியப் பிரதிநிதித்துவ அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் எதிர்வரும் 14 ஆம் திகதி இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் செல்லும் அனைத்து விமான சேவைகளும் ரத்து செய்யப்படுகிறது என ஏர் இந்தியா தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் மீது அரபு நாடுகள் கடந்த 1973 ஆம் ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி தாக்குதல் நடத்தின. அன்றைய தினம் யூதர்களின் காலண்டரில் மிகவும் புனிதமான நாள் ஆகும். இந்த தாக்குதலின் 50-ஆம் ஆண்டை முன்னிட்டு நேற்று இஸ்ரேல் மீது ஹமாஸ் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

'ஒபரேஷன் அல்-அக் ஷா ஃபிளட்' என்ற பெயரில் தாக்குதலை தொடங்கிய ஹமாஸ் தீவிரவாதிகள் சுமார் 20 நிமிடங்களில் இஸ்ரேலை நோக்கி 5 ஆயிரம் ரொக்கெட் குண்டுகளை வீசினர்.

இந்த குண்டுகள் இஸ்ரேலின் தெற்கு மற்றும் மத்திய பகுதிகளில் விழுந்து வெடித்தன. இஸ்ரேலின் ஆஸ்கெலான் கடற்கரை நகரில் பல வாகனங்கள் ரொக்கெட் குண்டு வீச்சில் தீப்பற்றி எரிந்தன.

இதையடுத்து ஜெருசலேம் நகரில் போர் எச்சரிக்கை விடுக்கும் அபாய ஒலிகள் ஒலிக்கப்பட்டன. காசா எல்லை அருகே வசிக்கும் மக்கள் வீட்டுக்குள் இருக்கும்படியும், பாதுகாப்பான இடங்களில் தங்கும்படியும் இஸ்ரேல் அரசு அறிவுறுத்தியது.

தற்போது இஸ்ரேல் - பாலஸ்தீன எல்லையில் மிகக் கடுமையான போர் மூண்டுள்ளது. இந்தப் போரில் வெற்றி நிச்சயம் என நேற்றைக்கே இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு கூறியதையடுத்து, உலகமே இந்தப் போரை உற்று நோக்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# முற்றாக அழிந்த 12 கிராமங்கள்!

மேற்கு ஆப்கானிஸ்தானில், ஈரானுக்கு அருகே ஏற்பட்ட நில நடுக்கம் காரணமாக அங்கு உயிரிழந்தோரின் எண்ணிக்கை இரண்டாயிரத்தை கடந்துள்ளது.

அத்துடன், ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது. நிலநடுக்கம் காரணமாக மேற்கு ஆப்கானிஸ்தானில் சுமார் 12 கிரா மங்கள் முற்றிலும் அழிந்துள்ளன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் நிலநடுக்கத்தால் இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என சர்வதேச ஊடகத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.



# பட்டாசு களஞ்சியத்தில் வெடி விபத்து; தமிழகத்தை சேர்ந்த 13 பேர் உயிரிழப்பு





தமிழக எல்லை அத்திப்பள்ளியில் உள்ள பட்டாசு களஞ்சியத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் தமிழர்கள் 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

பெங்களூர் நகர்ப்புற மாவட்டம் கர்நாடக – தமிழக எல்லையில் உள்ள அத்திப்பள்ளியில் உள்ள பட்டாசு களஞ்சியத்தில் நேற்று மாலை திடீரென வெடி விபத்து ஏற்பட்டது.

வாகனத்தில் இருந்து பட்டாசு பெட்டிகளை இறக்கிக்கொண்டிருக்கும் போதே இந்த எதிர்பாராத விபத்து ஏற்பட்டுள்ளது.

ஒன்பது தீயணைப்பு வாகனங்கள் தீயை அணைக்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன.

எனினும் , தீபாவளி பண்டிகைக்காக களஞ்சியத்தில் பல லட்சம் மதிப்பிலான பட்டாசுகள் வைக்கப்பட்டிருந்ததால் தீ விபத்து கட்டுப்படுத்த முடியவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்த தீ விபத்தில் சிக்கி இதுவரை 13 பேர் உயிரிழந்துள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த சம்பவ இடத்திற்கு விஜயம் செய்த துணை துணை முதல் அமைச்சர் டி.கே.சிவக்குமார், வெடிவிபத்தில் பலியானவர்களின் குடும்பத்துக்கு தலா 5 லட்சம் ரூபா நிவாரண நிதி வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

இந்த விபத்தில் தருமபுரி மாவட்டம் அரூர் அருகே உள்ள அம்மாபேட்டை கிராமத்தைச் சேர்ந்த 7 பேர் உயிரிழந்துள்ளனர். இது கிராம மக்களிடையே சோகத்தை ஏற்படுத்தி யுள்ளது.

தருமபுரி மாவட்டம் அரூர் வட்டம் தீர்த்தமலை அருகே உள்ள வேட கட்ட மடுவு ஊராட்சி, டி. அம்மாபேட்டை கிராமத்தைச் சேர்ந்த 9 பேர் இந்த பட்டாசு கடைகள் வேலை செய்து வந்ததுள்ளனர்.

பட்டாசு வெடி விபத்தில் சிக்கி இவர்களில் ஏழு பேர் உயிரிழந்தனர். இரண்டு பேர் காயத்துடன் உயிர் தப்பியுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

# பிரதமர் மோடியை கொலை செய்ய சதித் திட்டம் எச்சரிக்கை விடுக்கும் தேசிய புலனாய்வு முகமை

டில்லி திகார் சிறையில் இருக்கும் தாதா லாரன்ஸ் பிஷ்னாயை விடுவித்து 500 கோடி ரூபா தராவிட்டால் பிரதமர் மோடியை படுகொலை செய்வோம் எனவும் நரேந்திர மோடி ஸ்டேடியத்தை குண்டு வைத்து தகர்ப்போம் என்றும் மின்னஞ்சல் மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மும்பை பொலிஸார் மற்றும் பாதுகாப்பு பிரிவுகளுக்கு என்.ஐ.ஏ. எனப்படும் தேசிய புலனாய்வு முகமை எச்சரிக்கை விடுத்துள்ளது.

மத்திய பாதுகாப்பு பிரிவு ஒன்றுக்கு மிரட்டல் மின்னஞ்சல் ஒன்று வந்துள்ளது. அந்த மின்னஞ்சலில் சிறையில் இருக்கும் தாதா லாரன்ஸ் பிஷ்னாயை விடுவிக்க வேண்டும். 500 கோடி ரூபா தர வேண்டும். இல்லையென்றால், பிரதமர் நரேந்திர மோடியை படுகொலை செய்வோம், அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி ஸ்டேடியத்தையும் குண்டுவைத்து தகர்ப்போம்.

இந்தியாவில் அனைத்தும் விற்பனை செய்யப்படுகிறது. நாங்களும் சிலவற்றை வாங்க வேண்டும். நீங்கள் எவ்வளவு பாதுகாப்புடன் இருந்தாலும், நீங்கள் எங்களிடம் இருந்து பாதுகாப்பாக இருக்க முடியாது.

நீங்கள் பேச விரும்பினால், நாங்கள் கூறியதை செய்யுங்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மின்னஞ்சல் எங்கிருந்து வந்தது என்ற விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த மிரட்டல் மின்னஞ்சல் குறித்து மும்பை பொலிஸார், குஜராத் பொலிஸார் மற்றும் பிரதமரின் பாதுகாப்பு தொடர்புடைய அமைப்புகளுக்கு என்.ஐ.ஏ. எச்சரிக்கை விடுத்துள்ளது.

மும்பையில் உள்ள வாங்கடே ஸ்டேடியத்தில் உலகக் கிண்ண கிரிக்கெட்டின் 5 போட்டிகள் நடைபெற உள்ளதால், அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.